# பழைய கற்காலம்

கி. மு 35000 - கி.மு. 10000

# பழைய கற்கருவிகள்

கல்லாயுதங்களின் அமைப்பு மற்றும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் கற்கருவிகளை தொல்லியலாளர்கள் நான்கு பிரிவுகளாக பிரித்துள்ளனர்.

- அபிவிலியோ அச்சுலியன் வகை
- கிளாக்டோனியன் வகை
- லெவலாய்சியன் வகை
- மூஸ்டிரியன் வகை



பழைய கற்கால கைக்கோடரி

சென்னைக்கு அருகில் இருக்கும் கொற்றலையாற்றின் சமவெளியிலும், வட மதுரையிலும் பழைய கற்காலத்தைச் சேர்ந்த கைக்கோடரிகள், உளிகள், கத்திகள் மற்றும் சிறிய கற்கருவிகள் கிடைத்துள்ளன. பின்னர் காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, வட ஆர்க்காடு போன்ற மாவட்டங்களிலும் இத்தகைய கருவிகள் கண்டறியப்பட்டன.



தொடக்கத்தில் ” ஆடைகள் இன்றித்திரிந்த ” பழைய கற்கால மனிதன் பின்னர் இலைகள், மரப்பட்டைகள் மற்றும் விலங்குகளின் தோல்கள் போன்றவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். இவற்றால் கடுங்குளிரிலிருந்தும், கடும் வெப்பத்திலிருந்தும் தங்களைக் காத்துக் கொண்டனர்.